# என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?

**மணிவாசகன்**
*(ஒரு பேப்பருக்காக)*

இன்று மாவீரர் நாள்

தமிழ் மண் விடுதலையடைய வேண்டும், தமிழ் மக்கள் அமைதியுடனும் சந்தோசத் துடனும் வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் எதிர்காலத்தை விருப்பு வெறுப்புகளை சொந்த பந்தங்களை எல்லாம் துறந்து உறுதியுடன் போராடி தங்கள் உயிர்களைத் தந்த மாவீரர்களை நினைவுகூருகின்ற நாள்.

தியாகம் என்ற சொல்லின் எல்லை எது என்ற கேள்விக்கு உதாரணம் காட்டக் கூடிய வகையில் வாழ்ந்து தமிழ் மண்ணின் விடிவிற்காய் தம் வாழ்வை முடித்துக் கொண்ட தியாக சீலர்களுக்கான நாள்.

ஆயிரம் ஆயிரம் கனவுகளுடன் வாழ வேண்டிய வயதில் ஆயுதம் காட்டி எம்மை அடக்க முற்பட்ட சிங்களத்திற்கு அந்த ஆயுதத்தினாலேயே பதில் சொல்லப் புறப்பட்டு தியாக வேள்வியிலே ஆகுதியான வர்களுக்கான நாள்.

மாவீரர் தியாகம் இலகுவில் மறக்கப் படக் கூடியதா?

இளமைக் காலத்துக்கே உரிய குறும்புகள், குழப்படிகள், சீண்டல்கள் இவை எல்லா வற்றையும் புறம் தள்ளி, இன்னும் சரியாகச் சொல்வதானால் தங்களைத் தாங்களே ஒறுத்து கட்டுக் கோப்பாக வாழ்ந்து வியக்கத்தக்க வீர சாகசங்களைச் செய்த விற்பன்னர்கள் அல்லவா இவர்கள்.

'தமிழ் நாய்கள்' என்று ஏளனம் செய்து தாம் நினைத்த போதெல்லாம் அடித்துத் துரத்தியவர்களை 'தமிழ்ப் புலிகள்' என்று அச்சத்தோடும் பிரமிப்போடும் பார்க்க வைத்தவர்களல்லவா அவர்கள்?

என்குடும்பம், என் பிள்ளை, என் சொத்து என்ற குறுகிய வட்டங்களைக் கடந்து எம் நாடு, எம் மொழி, எம் மக்கள் என்று சிந்தித்த வித்தகர்களல்லவா இவர்கள்

சிங்கள அரசின் ஆள் ஆயுத பலத்திற்கு முன்னால் இவர்கள் எம்மாத்திரம் என்று ஏளனம் செய்தவர்களை மூக்கின் மேல் விரல் வைக்க வைத்த வீரப் புதல்வர்களல்லவா இவர்கள்?

படுத்த படுக்கையாய்க் கிடப்பவர்கள் கூடக் கண்டு அஞ்சும் மரணத்தை சிரித்தமுகத்துடனே ஏற்கத் துணிந்தவர்களல்லவா இவர்கள்?

ஒவ்வொரு போராளிக்குள்ளும் எத்தனை கதைகள்?

சமர்க்களத்திலே என்னுயிர் போக நேரிட் டாலும் வானத்திலிருந்து மலரும் தமிழீ ழத்தைப் பார்ப்பேன் என்று சொன்ன திலீபன்கள் எத்தனை பேர்?

மணமாலை காய்வதற்கு முன்பே பிணமாலையைச் சூடிக் கொண்ட குமரப் பாக்கள், புலேந்திரன்கள் எத்தனை பேர்?

சிறிலங்கா அரசாங்கம் சிங்களத் தலை நகரில் வைத்துக் உங்களைக் கொல்ல முயற்சிக்காதா என்ற நிருபர்களின் கேள்விக்கு சிங்கள அரசை நம்ப முடியாது தான் ஆனால் அப்படி எனதுயிர் போனாலும் அது தமிழ் மக்களுக்காகத் தானே என்று சொன்ன தமிழ்ச் செல்வன்கள் எத்தனை பேர்?

புலத்திலே வாழ்ந்த வசதியான வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு தாயகப் போரிலே தம்மை இணைத்துக் கொண்ட பாலசிங்கங்கள் எத்தனை பேர்?

ஆறடி நிலம் கூட எமக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டு தமது முகத்தை மறைத்து முகவரியை மறைத்து, தமது இலட்சியத்துக்காய் காற்றோடு கலந்து விட்ட கரும்புலிகள் எத்தனை பேர்?

மூன்று முறை நான்கு முறை காயப்பட்ட போதும் சிங்களத்தின் வான் கலங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தலைமைக்கு அறிவித்துக் கொண்டே வீரமரணத்தைச் சந்தித்தவர்கள் எத்தனை பேர்?

**ஆண்டுக்கொரு முறை மாவீரர் நாளிலே தீபமேற்றி மலர் சொரிந்து வணங்கி விட்டு எமது காரியங்களுக்கே புதைந்து போகப் போகிறோமா?**

இந்தத் தியாக சீலர்களை நினைத்ததுமே எங்கள் மனதில் புனிதமும் மரியாதையும் இன்னும் சரியாகச் சொல்வதானால் ஒரு குற்றஉணர்வும் ஏற்படுவதில் வியப்பொன்றும் இல்லை.

இந்த மண்ணின் மைந்தர்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்.?

அந்தத் தியாக சீலர்களின் இலட்சியைக் கனவை நனவாக்க நாம் என்ன செய்யப் போகிறோம்?

ஆண்டுக்கொரு முறை மாவீரர் நாளிலே தீபமேற்றி மலர் சொரிந்து வணங்கி விட்டு எமது காரியங்களுக்கே புதைந்து போகப் போகிறோமா?

ஆட்டிலெறிச் சத்தங்கள் இங்கில்லை. அந்நியப் படைகளின் அட்டகாசமும் இல்லை. வெளியே சென்ற பிள்ளை உயிருடன் திரும்புவானா என்று அஞ்சத் தேவையில்லை. வெள்ளை வான் தொல்லையும் எமக்கில்லை. உணவுக்குப் பஞ்சமில்லை. உடைகளுக்கும் குறைவில்லை. கதகத மெத்தையிலே கண்துாங்கத் தடையில்லை. ஆனால் எம் உறவுகள்...

வெட்ட வெளியிலே, கடும் மழையிலே கண்ணயர வழியின்றி அலைந்து கொண்டி ருக்கிறார்களே?

மக்கள் தேவைகளைக் கவனிப்பதும் அல்லது மாற்றானை புறமுதுகிட்டோடச் செயயப் போரிடுவதுமாய் சுமக்க முடியாச் சுமைகளுடன் களத்தில் நிற்பவர்களுக்காக நாம் ஒரு சிறும்பைத் தானும் நகர்த்த உதவ வேண்டாமா?

அல்லல் படும் மக்களுக்கு உதவுவதா? அல்லது அந்நியப் படைகளுடன் சமராடுவதா என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் கண்மணிகளுக்கு நாம் கைகொடுக்க வேண்டாமா?

வெற்றிச் செய்திகளைக் கண்டால் பங்காளியாவதும் தோல்விகளைக் கண்டால் அந்நியராவதும் தான் அந்தத் தமிழ் மண் எமக்குக் கற்றுத்த தந்த வாழும் வழியா?

தமிழர் மட்டும் கூடுகின்ற திருமண விழாக்கள், சாமத்தியச் சடங்கள், பிறந்த நாள் விழாக்கள் என்பவற்றை மட்டும் தாயக அவலங் களைப் பகிர்வதற்கும் தாயக நிலமையை கதைப்பதற்கும் ஏற்ற இடங்களாக மட்டுப்படுத்திக் கொண்டது எந்த விதத்தில் நியாயம்?

எங்கள் மக்கள் படும் துயரை, எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை இந்நாட்டில் வாழும் எம் அயலவர்கள், சக வேலையாட்கள், பாடசாலை நண்பர்கள் இவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் கூடத் தயக்கம் காட்டுவது எந்த வகையில் நியாயம்?

எமது பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எமது பிரதேச அரசியல் வாதிகளுக்கு எமது பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டியது எங்கள் கடமையல்லவா? இந்தக் கடமையிலிருந்து நாம் வழுவலாமா?

தமிழீழக் கனவுடன் கண் துாங்கும் எம் சொந்தங்களுக்காய் இதையாவது செய் வோமா? அதையும் காலம் தாழ்த்தாது செய்வோமா?


தாயகத்தில் அவதிப்படும் குழந்தைகளின்
அமைதி நிறைந்த வாழ்வுக்காக
**BLUE GREEN RESTARURANT & BAR**
ஆதரவில்
**OVIYA DANCE ACADEMY**
பெருமையுடன்வழங்கும்



தேன் சிந்துதே வானம்

ஊரிழந்து உறவிழந்து உடுக்க
உடையின்றி உண்ண உணவின்றி
அல்லல்படும் அரும்புகளை
அன்பு செய்வோம்

வெண்புறா
WHITE PIGEON

ராகசங்கமம் புகழ் ராகாஸ்
இசைக்குழுவின் இனிக்கும் இசையில்
ஐரோப்பிய–லண்டன் பாடகர்கள் ஒரே
மேடையில் சங்கமிக்கும் இனிய இசை
இரவு

DECEMBER 6 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு
ZOROASTRIAN CENTER
440 ALEXANDRA AVENUE
HARROW
HA3 9TL
**07877044224, 07957920910, 07976845524**
oviyaacademy@hotmail.co.uk

**Tickets Single £5.00**